1971 ஜூலை 19]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, கேள்வி திருச்சி மாவட்டத்தைப் பற்றியது என்றாலும், பத்மநாபபுரம் சம்பந்தமாக, அதற்கான கண்ட்ராக்டர் ஒப்பந்தம் முடிந்து விட்டது. வேலை சீக்கிரமே துவங்கப் போகிறார்கள்.

Relief to victims in fire accidents in Mylapore area

* 305 *Q*.—THIRU A. SWAMIDHAS : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether financial help was offered to the victims of the fire accidents in Mylapore area in Madras city about the 10th May 1971; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : 10-5-1971 அன்று சென்னை மைலாப்பூர் வட்டாரத்தில் தீ விபத்து ஏதும் ஏற்படவில்லை. மைலாப்பூர் கபாலித் தோட்டத்தில் 9-5-1971 அன்று ஒரு தீ விபத்தும், 11-5-1971 அன்று மற்றொரு தீ விபத்தும் ஏற்பட்டன.

(இ) 9-5-1971 அன்று மாலை 1 மணியளவில் சென்னை மைலாப்பூர் கபாலித் தோட்டத்தில் ஒரு தீவிபத்து ஏற்பட்டது. 323 குடிசைகள் அழிந்து போயின. 737 குடும்பங்கள் பாதிக்கப் பட்டன. இத் தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண மாக ரூ. 33,680 வரை உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

மற்றொரு தீ விபத்து 11-5-1971 அன்று மாலை 2 மணியளவில் சென்னை மைலாப்பூர் கபாலித் தோட்டத்தில் ஏற்பட்டது. அதில் 85 குடிசைகள் பாதிக்கப்பட்டன. 185 குடும்பங்கள் வீடிழந் தனர். பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ. 8,080 வரை உதவித் தொகை யாக வழங்கப்பட்டுள்ளது.

சென்னி மலையிலுள்ள சாயப்பட்டறை

* 306 வினு—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

சென்னி மலை நெசவாளர்கள் கூட்டுறவு உற்பத்தி சங்கத் திற்குச் சொந்தமான சாயப்பட்டறையில் நாளொன்றுக்கு எத்தனை பிரிநூலுக்கு சாயம் போடப்படுகிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சென்னி மலை நெசவாளர்கள் கூட்டுறவு உற்பத்திச் சங்கத்திற்குச் சொந்தமான சாயப்பட்டறை யில் நாளொன்றுக்கு 20,400 முதல் 23,800 பிரிகள் வரை (Hanks) சாயம் போடப்படுகிறது. அதாவது நாளொன்றுக்கு 3-லிருந்து 3½ பேல்கள் வரை (சிப்பம்) சாயம் போடப்படுகிறது.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினு நான் கொடுத்து நான்கு ஆண்டுகள் ஆகின்றன. என்றாலும், அந்த